திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தலைமையில் மீஞ்சூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பா.சுகுமாரன் முன்னிலையில் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஏற்பாட்டில் மீஞ்சூர் வடக்கு ஒன்றியம். பழவேற்காடு மீனவ கிராமங்களில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அரிசி, பருப்பு, போர்வை போன்ற அத்தியாவசிய பொருட்களை அமைச்சர்கள் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன், பி.மூர்த்தி ஆகியோர் வழங்கினார். இதில் ஜெயக்குமார் எம்.பி., துரைசந்திரசேகர் எம்.எல்.ஏ. அத்திப்பட்டு ஜி.ரவி, அன்புவாணன், பி.ஜெ.மூர்த்தி, எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், மணபாலன், கோளூர் கதிரவன், உமாமகேஸ்வரி பழவேற்காடு அ.முகமது அல்லி மற்றும் பலர் உள்ளனர்.

எழும்பூர் தொகுதியில் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. ஏற்பாடு!

99 - வது வட்டத்தில் 1500 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

கழகச் செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் வழங்கினார்!

சென்னை, டிச.14-

எழும்பூர் தொகுதி, 99வது வட்டத்தைச் சேர்ந்த 1,500 குடும்பங்களுக்கு எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கிறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், கழகச் செய்தி தொடர்பு தலைவரும் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினருமான டி.கே.எஸ். இளங்கோவன் நிவாரண உதவிகளை வழங்கினார்.

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் நேரில் சென்று மீட்புநிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க, எழும்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும் தி.மு.கழகச் சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் பத்தாவது நாளாக, எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 99வது வட்டத்திலுள்ள திடீர் நகர், சாலைமா நகர், பொன்னன் தெரு, பொன்னன் தெரு குடிசைப் பகுதி, சண்முகராயன் தெரு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கிடும் வகையில், அவரது ஏற்பாட்டில், கழகச் செய்தி தொடர்பு தலைவரும் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினருமான டி.கே.எஸ். இளங்கோவன், புரசை வாக்கம், சுந்தரம் தெரு, சென்னை நடுநிலைப் பள்ளியில் நடந்த நிகழ்வில் 1,500 பெட்ஷீட், 1,500 லுங்கி, தலா 5 கிலோ கொண்ட 1,500 அரிசிப் பை மற்றும் 3,000 கெல்லாக்ஸ் பாக்கெட்டுகள் ஆகிய நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

இந்நிகழ்விற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் யு.விஜய போஸ் முன்னிலை வகித்தார்.

எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருஷோத்தமன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் மா.காந்தி, மு.கமலக் கண்ணன், 108வது வட்டத் துணைச் செயலாளர் சீனிவாசன், எழும்பூர் சி.ரமேஷ், பகுதிப் பிரதிநிதி சி.குணசேகரன், கவிதா, முன்னாள் பகுதிப் பிரதிநிதி பாரத் பூசைமணி, தினேஷ், ஜான்சன், புகழேந்தி, திடீர் நகர் தட்சிணாமூர்த்தி, சாலைமா நகர் ஷீலா உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், முன்னோடிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

டி.ஜெ.கோவிந்தராஜன் தலைமை! பா.சுகுமாரன் முன்னிலை!

பழவேற்காடு மீனவ மக்களுக்கு நிவாரண உதவிகள்!

அமைச்சர்கள் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் - பி.மூர்த்தி வழங்கினார்!

திருவள்ளூர், டிச. 13-

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தலைமையில் மீஞ்சூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பா.சுகுமாரன் முன்னிலையில் மீன்வளத் துறை அமைச்சர் அனிதா அர்.ராதாகிருஷ்ணன் ஏற்பாட்டில் மீஞ்சூர் வடக்கு ஒன்றியம் பழவேற்காடு மீனவ கிராமங்களில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு மக்களுக்கு தேவையான அரிசி, பருப்பு, போர்வை போன்ற அத்தியாவசிய பொருட்களை அமைச்சர்கள் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், பி.மூர்த்தி ஆகியோர் வழங்கினார்.

இதில் ஜெயக்குமார் எம்.பி., துரைசந்திரசேகர் எம்.எல்.ஏ. ஒன்றிய குழு பெருந்தலைவர் அத்திப்பட்டு, ஜி.ரவி, கொள்கை பரப்பு துணைச் செயலாளர் அன்புவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பி.ஜெ.மூர்த்தி, மீஞ்சூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், கும்முடி பூண்டி மணபாலன், மாவட்ட துணைச் செயலாளர் கோளூர் கதிரவன், மாவட்ட ஊராட்சிகுழு பெருந்தலைவர் திருமதி உமாமகேஸ்வரி மற்றும் பழவேற்காடு அ.முகமது அலவி, கே.ஆறுமுகம், நேசராணி தேசப்பன், தமின்ஷா, ஜெயபால், அசோகன், கன்னிமுத்து, பி.எல்.சி.ரவி, காசி, சி.எம்.ரமேஷ், தவமணி, சுப்பிரமணி, கருணாநிதி, பழனி, ஜெ.ராஜன், குமார், மைனு தீன்,

மாநில, மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதி கள் மற்றும் பழவேற்காடு பகுதி சுற்றுவட்டார கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பொதுமக்கள் என பலர் உடன் இருந்தனர்.

வண்ணாரப்பேட்டை ஜி.ஏ.ரோடு,எம்.சி ரோடு சுற்றுவட்டார வியாபாரிகள் நல சங்கம் சார்பில்

இராயபுரம் பகுதிவாழ் மக்களுக்கு நிவாரண உதவிகள்!

தா.இளைய அருணா, எர்ணாவூர் நாராயணன் வழங்கினர் !

சென்னை டிச:14

மிக் ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட இராயபுரம் பொது மக்களுக்கு அறுசுவை உணவு மற்றும் பெட்ஷீட், புடவை, கைலி, வேட்டி, பிரட், ரஸ்க், உள்ளிட்ட மளிகை பொருட்கள் வழங்கப்பட்டது.

இதில் சிறப்பு விருந்தினர்களாக சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவரும் சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா மற்றும் தமிழ்நாடு பனைமர தொழிலாளர் நலவாரிய தலைவர் எர்ணாவூர் நாராயணன் ஆகியோர் கலந்து கொண்டு 2024 ஆம் ஆண்டுக்கான வண்ணாரப்பேட்டை எம்.சி.ரோடு,ஜி.ஏ. ரோடு,சுற்றுவட்டார வியாபாரிகள் சங்க காலண்டரை சங்க நிர்வாகிகளுக்கு கொடுத்து, ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை வண்ணாரப்பேட்டை எம்.சி. ரோடு, ஜி.ஏ.ரோடு, சுற்று வட்டார வியாபாரி நல சங்கத்தினர் செய்திருந்தனர்.

சங்கத்தின் தலைவரும் சென்னை வடக்கு மாவட்ட சிறுபான்மை அணி மாவட்ட தலைவர் தமிமுன் அன்சாரி ஒருங்கிணைப்பாளர் சரவணகுமார், செயலாளர் சுப்பிரமணியன், மம்மி டாடி பாஸ்கர், காமாட்சி கண்ணன், எஸ்.ஆர். எம்.ஏ. சிங்காரத்தோட்ட வியாபாரிகள் சங்கத்தினர் தலைவர் செயலாளர் மற்றும் வியாபாரி சங்க தலைவர் ராபர்ட், சென்னை மிட்டாய் வியாபாரிகள் சங்க தலைவர் கணேசன், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு நிர்வாகிகள் ஜகாரியா,சரவணன், மற்றும் கார்த்திக், பட்டை வேட்டி உதயராஜ், சிங்காரத் தோட்டம் டெக்ஸ்டைல்ஸ் வியாபாரிகள் சங்கத் தலைவர், எம்.சி.ரோடு வணிக வளாகத்தின் தலைவர் தோழர் செல்வானந்தம், வண்ணாரப்பேட்டை எம்.சி.ரோடு ஜி.ஏ.ரோடு சுற்று வட்டார வியாபாரி சங்க பொருளாளர் பிஜு துணைத் தலைவர்கள் மாரிமுத்து,சக்தி, நாகேந்திரன், எஸ்.வி.தன்ராஜ், கட்பீஸ் ஆனந்தகுமார், எம்.சி.ராஜசேகர், எம்.கே.சாகுல் ஹமீது, துணைச் செயலாளர் மற்றும் இளைஞர் அணியினர் தட்சிணாமூர்த்தி, லோகேஷ் குமார், ரமேஷ், முருகன், சுப்புராஜ், செந்தில்குமார், எஸ்.எம்.பாட்ஷா, அப்பாஸ் அலி, எஸ்.எஸ்.கிஷோர், எஸ்.எஸ். நாகராஜ், டி.மோகன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திருச்செந்தூர், ஆலந்தலை தெற்கு தெருவைச் சேர்ந்த ஜூலியஸ் மகன் ரவிஸ்டன் (30) கடந்த டிச. 9ம் தேதி கடலில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது ராட்சத அலை மோதி தவறி விழுந்து உயிரிழந்தார். இந்நிலையில் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் உயிரிழந்த மீனவர் குடும்பத்திற்கு நேரில் சென்று ஆறுதல் கூறினார். அப்போது மீன்வளத்துறை சார்பில் ரூ. 2 லட்சம், தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ரூ. 1 லட்சம் என ரூ. 3 லட்சம் நிதி உதவியை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் வழங்கினார். நிகழ்வின் போது சில்வஸ்டர், வாமனன், புஸ்ரா, ஜெகன், ராமகிருஷ்ணன், ஆசைதம்பி, சுவைக்கின், உறுப்பினர் லெவி, கவுன்சிலர்கள் மஞ்சுளா தொம்மை, ஆனந்த ராமச்சந்திரன், தினேஷ் கிருஷ்ணா, உமரிசங்கர், செங்குழி ரமேஷ், ஜெபமாலை, லெனின், ரெம்சியூஸ், சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி நகர திமுக சார்பில் குமணன்சாவடி சிப்பாய் நகர் பகுதியில் மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 500 நபர்களுக்கு அரிசி காய்கறிகள் வெள்ள நிவாரண தொகுப்புகளில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி ஆகியோர் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் நகரச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை, ஆவடி மேயர் ஜி.உதயகுமார், நகர் மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், ஒன்றிய செயலாளர்கள் ப.ச.கமலேஷ், சே.பிரேம் ஆனந்த், நகர கழக நிர்வாகிகள் பூவை எச்.தாஜுதீன், துரை பாஸ்கர், அப்பர் ஸ்டாலின், டில்லி ராணிமலர்மண்ணன், ஜெ.அசோகுமார், ஜெ.சுதாகர், இரா.புண்ணியகோட்டி, ப.அன்பழகன், பி.சௌந்தரராஜன், வட்ட செயலாளர்கள் உமாசங்கர், எம்.கே.சுகுமார், இன்பசேகரன், ஹருன், நெல்சன், தங்கம் திருமலை, சரவணன், ஏ.எஸ்.ஆர்.சுரேஷ், ஜெய்சங்கர், சத்தியா, யுவராஜ், ஜெ.அமிதாப், க.சாஜகான், விமல்ஆனந்த், திராவிடதேவன், அம்முபாலாஜி, கார்த்திக், அசார், லக்ஷ்மன்ஷா, உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சூளப் பள்ளம் பகுதியில் சுமார் 2000 பொதுமக்களுக்கு வெள்ள நிவாரணப் பொருட்களை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, கணக்கு நிலைக்குழுத் தலைவர் க. தனசேகரன், பகுதிச் செயலாளர் கே.கண்ணன் எம்.சி, வட்டச் செயலாளர்கள் அ.கதிரேசன், பி.கே.குமார், சோ.செந்தில்குமார், மு.அன்பழகன், பூக்கடை பழனிச்சாமி, இரா.செழியன், பகுதி துணை செயலாளர் அஜந்தா ரவி, மாவட்ட அமைப்பாளர் சசிகுமார், நிஷா, சையத் உள்ளிட்ட கழகத்தினர் உடன் இருந்தனர்.

எண்ணூர் 'கிரீக்' பகுதியில் - எண்ணெய் கசிவு அகற்றும் பணிகள்!

தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா ஆய்வு செய்தார்!

சென்னை, டிச.13-

எண்ணூர் கிரீக் பகுதியில் ஏற்பட்டுள்ள எண்ணெய் கசிவு அகற்றும் பணிகள் தொடர்பாக தலைமைச் செயலாளர் ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தலைமையில் 2023 மே திங்களில் அமைக்கப்பட்ட மாநில எண்ணெய் கசிவு நெருக்கடி மேலாண்மை தொடர்பான உயர்மட்டக் குழுவின் கூட்டம் நேற்றுமுன் தினம் (11.12.2023) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், வருவாய் ஆணையர் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், சுற்றுச் சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, நீர் மேலாண்மைத் துறையின் கூடுதல் செயலாளர் டாக்டர் சந்தீப் சக்சேனா, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, காவல் துறையின் தலைமை இயக்குநர் அபாஷ் குமார், சென்னை மாநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர், கடலோர காவல் படை தலைமை இயக்குநர் விஜயகுமார், மற்றும் சென்னை பெட்ரோலிய கழகம், மணலி தொழிற்சாலைகள் சங்கம் மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவற்றின் மூத்த அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

எண்ணூர் க்ரீக் பகுதி மற்றும் பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் ஏற்பட்டுள்ள எண்ணெய் கசிவின் அளவு குறித்து தலைமை செயலாளர் ஆய்வு செய்தார். அவ்வமயம், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் உறுப்பினர் செயலாளர் தலைமையில், அண்ணா பல்கலைக்கழகம், நீரி, ஒன்றிய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் கடலோரக் காவல் படை ஆகியவற்றின் நிபுணர்களை உறுப்பினர்களாகக் கொண்ட தொழில்நுட்பக் குழுவை 10.12.2023 அன்று சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அமைத்துள்ளதாக தலைமைச் செயலாளர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

நிபுணர் குழு விரிவான கள ஆய்வுகளை மேற்கொண்டு சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் வளாகத்திலிருந்து எண்ணெய் கசிவு, பாதுகாப்புக் குளங்கள் மற்றும் மழை நீர் வடிகால் குளங்களில் இருந்து பக்கிங்ஹாம் கால்வாயில் நுழைந்து இறுதியாக எண்ணூர் கிரீக் ஓடையில் அடைந்ததாக முடிவு செய்தது. அருகில் உள்ள மீனவர் குடும்பங்களில் வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தலைமைச் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகள் நடத்திய கள ஆய்வில் எண்ணூர் க்ரீக் பகுதிகளில் கணிசமான எண்ணெய் படிவு இருப்பது தெரியவந்தது. பல கரையோர மீனவச் சமுதாயத்தினரின் வீடுகளுக்குள் நுழைந்த எண்ணெய் கலந்த நீர், அவர்களின் தனிப்பட்ட உடைமைகளைப் பாதித்து அவர்களின் படகுகளில் எண்ணெய் படிந்து அவர்களின் வாழ்வாதாரத்தையும் மோசமாகப் பாதித்துள்ளது. எண்ணெய் கசிவினால் அப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை மதிப்பீடு செய்யுமாறு சென்னை மாவட்ட ஆட்சியருக்கும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்பக் குழுவின் அறிக்கையை கவனத்தில் கொண்டு, நிபுணர்கள் வழிகாட்டுதலின் கீழ் தேவையான ஆட்கள் மற்றும் இயந்திரங்களுடன் போர்க்கால அடிப்படையில் எண்ணெயை அகற்றும் பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு சென்னை பெட்ரோலிய கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டது. தொழில்நுட்பக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் எண்ணெய் கசிவை நீக்குவதற்கு சென்னை பெட்ரோலிய கார்ப்பரேஷன் கூடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு பணிகளை விரைவாக முடிக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

தோல் நோய் மருத்துவர்களின் துணையோடு தேவைப்படுபவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சிறப்பு மருத்துவர் குழுவை நியமித்துள்ளது. மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை மதிப்பீடு செய்யும் பணி மீன்வளத்துறையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல், கால நிலை மாற்றம் மற்றும் வனத்துறையும் இப்பகுதியில் எண்ணெய் கசிவினால் ஏற்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதிப்புகளை மதிப்பீடு செய்து வருகிறது. கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் கால்நடைகளுக்குத் தகுந்த சிகிச்சை அளிப்பதற்காக சிறப்பு முகாம் நடத்தப்பட்டுள்ளது.

எண்ணெய் கசிவினை நீக்குவதற்கு விதிகளின்படி தகுந்த தொழில்நுட்ப உதவிகளை வழங்குமாறு கடலோர காவல் படை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் 33(A) விதியின்படி நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதியில் கூறப்பட்டுள்ளபடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சென்னை பெட்ரோலிய கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு ஏற்கனவே உயர் அலுவலர்கள் குழுவை நியமித்து உடனடியாக நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், பாதிக்கப்பட்ட மீனவர்கள் உள்ளிட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. சென்னை மற்றும் எண்ணூர் துறைமுகங்களில் இருந்து எண்ணெய் படிவங்களை நீக்குவதில் அனுபவம் பெற்ற முகமைகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்த முகமைகள் எண்ணெய் கசிவு முழுவதையும் உறிஞ்சி அகற்றுவதற்கு தேவையான சிறப்பு இயந்திரங்களை பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

11.12.2023 அன்று எண்ணூர் கிரீக் பகுதியில் ஏற்பட்டுள்ள எண்ணெயை அகற்றும் பணிகளில் தேவையான பொருட்களுடன் 20 படகுகளில் ஆட்களும் ஈடுபட்டுள்ளனர். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், வனம் மற்றும் வருவாய்த் துறைகளைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் குழு மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் கண்காணிப்பு அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து எண்ணெய் கசிவை அகற்றுதல் மற்றும் நிவாரணப் பணிகளை விரைவுபடுத்தும் பணியில் முனைந்துள்ளது.

மாவட்ட அளவிலான எண்ணெய் கசிவு நெருக்கடி மேலாண்மை கூட்டத்தை கூட்டுமாறு சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர்களுக்கு தலைமைச் செயலாளர் உத்தரவிட்டுள்ளார். மாநில எண்ணெய் கசிவு நெருக்கடி மேலாண்மைக் குழு, எண்ணெய் அகற்றுதல் மற்றும் நிவாரணப் பணிகள் முடிவடையும் வரை தினமும் இப்பணிகளை கண்காணிக்கவும் முடிவு செய்துள்ளது.

வண்ணாரப்பேட்டை ஜி.ஏ.ரோடு.எம்.சி ரோடு சுற்றுவட்டார வியாபாரிகள் நல சங்கம் சார்பில் இராயபுரம் பகுதி வாழ் மக்களுக்கு நிவாரண உதவிகளை மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா, எர்ணாவூர் நாராயணன் ஆகியோர் வழங்கினர்.

தேனி வடக்கு மாவட்டம் குச்சனூர் பேரூராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டம் உபயோக பயன்பாட்டிற்கு தொழிலதிபர் வீரமணியால் டிராக்டர் அன்பளிப்பாக வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் தலைமையில் வழங்கப்பட்டது உடன் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணக்குமார், குச்சனூர் பேரூராட்சி தலைவர் ரவிச்சந்திரன், சின்னமனூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் கண்ணியம்பட்டி முருகேசன், கழக முன்னோடிகள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மிக்ஜாம் புயலால் ஏற்ப்பட்ட கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 1.2.3.வது வட்டத்தில் கட்சி பாகுபாடு இல்லாமல் பொதுமக்கள் அனைவருக்கும் பகுதி அவைதலைவர் மு.மணிவண்ணன் வட்ட செயலாளர் மு.ம.செந்தில்குமார், மாமன்ற உறுப்பினர் கோமதிமணிவண்ணன் எம்.சி. ஆகியோரது தலைமையில் தலா 5 கிலோ அரிசி 2000 பேருக்கு கிழக்குப் பகுதி கழக செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் மாநகராட்சி இளநிலை பொறியாளர் ஜெயக்குமார் மாவட்ட பிரதிநிதி ம.கி. தோழப்பன் அவை தலைவர் தமிழ்செல்வன் வட்ட துணை செயலாளர்கள் து.பீம்குமார், செ.பாரதி மாவட்ட துணை அமைப்பாளர் கே.புருஷோத்தமன் மு.ம.மதன்குமார் பகுதி பிரதிநிதிகள் எம்.ஆர்.பன்னீர்செல்வம் அ.சந்தோஷ்குமார், மு.பரமேஷ் இளைஞர் அணி நிர்வாகிகள் விக்னேஷ் மு.செந்தில்முருகன் அன்புமணி முத்தழகன் சந்தோஷ்குமார் சுதாகர் மாநகராட்சி நிர்வாகிகள் ஜெகன்ராஜ் மற்றும் கழகத்தினர்கள் உள்ளனர்.